Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
S.T.C.No.580/2021

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : சாரதா | Father/Husband Name | : முருகன் |
| Age | : | Calling | : |
| Date | : 09.02.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09.02.2026

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் பூசாரிபட்டி, சாம்பிராணிபட்டியில் குடியிருந்து கொண்டு, நான் தனியார் நிறுவனத்தில் அலுவலக பணியாளராக வேலை செய்து வருகிறேன். எனக்கு 2 ஆண் மற்றும் 1 பெண் பிள்ளைகள் உள்ளது. மூத்த மகன் பெயர் அருண்குமார், 2 வது மகன் பெயர் சரண்குமார், மகள் பெயர் திவ்யா. எனது மகள் திவ்யா 9 ம் வகுப்பு வரை படித்துள்ளார். எனது மகள் திவ்யா மார்கழி மாதம் 2001 ம் ஆண்டு பிறந்தாள். ஆஜர் எதிரி எனது மகள் திவ்யாவின் கணவர். அவர்களுக்கு ஒரு ஆண், ஒரு பெண் குழந்தை உண்டு. 2018 ம் வருடம் திருமணம் பேசி 2019 ம் வருடம் திருமணம் நடைபெற்றது. எதற்காக வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் எங்களுக்கு வேண்டாத நபர்கள் 2018 ம் வருடம் எனது மகளுக்கும், ஆஜர் எதிரிக்கும் திருமணம் பேசி முடித்ததை தவறாக கூறி இந்த வழக்கு தாக்கல் செய்துவிட்டார்கள். வேறு இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி ஆஜர்**.

**அசா2 யை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிகோரப்பட்டு அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 1 தீர்த்தக்கரை சமூக நல அலுவலர் எனது மகளுக்கும், ஆஜர் எதிரிக்கும் 2018ம் வருடம் அவர்களுக்கு திருமணம் நடைபெற்றது என்ற தகவல் பெற்றவுடன் அழைத்து விசாரித்து 2018ம் வருடம் ஆட்டுக்குளத்தில் உள்ள முருகன் கோவிலில் திருமணம் நடைபெற்றது என விசாரணையில் தெரியவந்ததுதான் 05.04.2018ம் தேதி போலீசாரிடம் புகார் சட்டப்படி புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

எனது மகளுக்கு திருமண வயது வருவதற்கு முன்பே எனது மகளை ஆஜர் எதிரி திருமண செய்தது சட்டப்படி தவறு என்பதால் இவ்வழக்கில் காவல் ஆய்வாளர் உங்கள் மருமகன் மீது இவ்வழக்கு பதிவு செய்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

எனது மகள் மைனர் என தெரிந்தே திருமணம் ஆஜர் எதிரி செய்துவிட்டார் அதனை மறைத்து தற்போது அவரை திருமணம் செய்து எனது மகள் 2 குழந்தைகளுடன் வாழ்ந்து வருவதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைணை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திருமண வயது முன்பே எனது மகளும், ஆஜர் எதிரியும் திருமணம் செய்து எங்கள் வீட்டில் இருந்து வந்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது 2019ம் வருடம் திருமணம் ஆனதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
S.T.C.No.580/2021

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திவ்யா | Father/Husband Name | : சரவணன் |
| Age | : | Calling | : |
| Date | : 09.02.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 09.02.2026

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் மேட்டுப்பட்டியில் 2 குழந்தைகள், மற்றும் ஆஜர் எதிரியுடன் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். 2018 ம் வருடம் நானும், ஆஜர் எதிரியும் காதலித்து வந்தோம், ஊரில் எங்களை பற்றி திருமணம் செய்து கொண்டதாக தவறாக பேசி வந்தார்கள். அதன் அடிப்படையில் என் கணவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எனது பிறந்த தேதி 18.12.2001 ஆகும். எனக்கும், ஆஜர் எதிரிக்கும் எங்களது ஜாதி வழக்கப்படி, எங்களது பெரியோர்கள் முன்னிலையில் 2019 ம் வருடம் இறுதியில் எங்களுக்கு திருமணம் நடைபெற்றது. வேறு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை

**எதிரி ஆஜர்.**

**அசா1 யை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிகோரப்பட்டு அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 1 தீர்த்தக்கரை சமூக நல அலுவலர் என்னையும், ஆஜர் எதிரியையும் 2018 ம் வருடம் எங்களுக்கு திருமணம் நடைபெற்றது என்ற தகவல் பெற்றவுடன் அழைத்து விசாரித்து 2018 ம் வருடம் ஆட்டுக்குளத்தில் உள்ள முருகன் கோவிலில் திருமணம் நடைபெற்றது என விசாரணையில் தெரியவந்ததுதான் 05.04.2018 ம் தேதி போலீசாரிடம் புகார் சட்டப்படி புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

உங்களுக்கு திருமண வயது வருவதற்கு முன்பே உங்களை ஆஜர்

எதிரி திருமண செய்தது சட்டப்படி தவறு என்பதால் இவ்வழக்கில் காவல் ஆய்வாளர் உங்கள் கணவர் மீது இவ்வழக்கு பதிவு செய்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நீங்கள் மைனர் என தெரிந்தே திருமணம் ஆஜர் எதிரி செய்துவிட்டார் அதனை மறைத்து தற்போது அவரை திருமணம் செய்து 2 குழந்தைகளுடன் வாழ்ந்து வருவதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திருமண வயது முன்பே நீங்களும், ஆஜர் எதிரியும் திருமணம் செய்து அவரவர் பெற்றோர் வீட்டில் இருந்து வந்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது 2019ம் வருடம் இறுதியில் திருமணம் ஆனதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.